[1987 ஏப்ரல் 20

திருவெறும்பூர் தொகுதி, பொன்மலை நகராட்சி செம்பட்டிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலை.

408—(*வினா எண் 13566) திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூர் தொகுதி, பொன்மலை நகராட்சி, செம்பட்டு பகுதியில் தோல் பதனிடும் தொழிற்கூடத்தால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பெற்ற நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அரசு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இங்கே குறிப்பிட்டார்கள். நன்றி. பொன்மலை நகராட்சிக்கு உட்பட்டிருக்கிற பகுதியில் இந்த தோல் பதனிடும் தொழிற்சாலை இருக்கிறது. இந்த தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளியேறுகின்ற கழிவு நீர் அத்தனையும் பக்கத்தில் இருக்கிற குண்டூர், திருவாச்சிப்பட்டி போன்ற கிராமங்களில் இருக்கிற 200-க்கு மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் நேரடியாக பாய்கிறது. இதனால் ஒவ்வோர் ஆண்டும் நெல் பயிரிட்டிருக்கிற விவசாயிகள் அதனை அறுவடை செய்ய முடியாத அளவுக்கு வேதனைக்கு ஆளாக்கப்பட்டுக்கொண்டு வருகிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் அங்கே வேலை பார்க்கின்ற தொழிலாளர்கள் அந்தத் தொழிற்கூடத்திற்கு பக்கத்திலே, கிழக்கிலேயும், மேற்கிலேயும் குடியிருந்து வருகிறார்கள். அந்தப் பகுதி வழியாக தான் இந்த கழிவு நீர் போய்க்கொண்டிருக்கிறது. இதுகுறித்து கடந்த காலத்தில் பல முறை அதிகாரிகளிடத்திலும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் சுற்றுப் பகுதிகளில் இருக்கிற சுகாதார கேட்டை தடுத்து,

1987 ஏப்ரல் 20]

சுகாதாரத்தை ஏற்படுத்துவதில் தொழிற்கூடத்தில் இருக்கின்ற உரிமையாளரால் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதோடு மட்டுமல்லாமல் அங்கே போர் வெல் அரசு அமைத்தால் . . . (மணியடிக்கப்பெற்றது) (பதில் இல்லை.)

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, காரம்பக்குடியில் செங்கல் தொழிற்சாலை.

409—(* வினா எண் 8142) திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, காரம்பக்குடியில் சேம்பர் செங்கல் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, காரம்பக்குடியில் பொதுப்பணித் துறை கண்மாய்களில் சேம்பர் செங்கல் தொழிற்சாலை ஒன்றை அமைக்க மண் பரிசோதனை செய்யப்பட்டு, ஊரகத் துறையிலிருந்து அந்த இடத்தில் அந்த தொழிற்சாலையை அமைப்பதற்கான செயற்குறிப்பும் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, அந்தப் பகுதி தொழிற்சாலை இல்லாத பகுதியாக இருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அந்த செயற்குறிப்பை வாங்கிப் பார்த்து, முன் உரிமை கொடுத்து அங்கே அந்தத் தொழிற்சாலையை அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சிறப்புத் திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை பகுதியிலுள்ள ராயவரம் என்ற இடத்தில் அண்ணா அரிசன கூட்டுறவு செங்கல் தொழிற்சாலை என்ற